பக்கங்கள் : எட்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 13 வியாழக்கிழமை (30.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 275

# ஆள்கடத்தல் அரசு அனுசரணையுடன் ஆசியாவில் இலங்கை முதலிடத்தில்!

## தண்டனை விலக்குடன் ஊக்குவிக்கப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்

ஹொங்ஹொங், ஓக.30

**வல்வந்தமான ஆள் கடத்தல்களுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அரசாங்கங்கள் அனுசரணை வழங்கும் ஆசிய நாடுகளில் இலங்கை முதலிடம் வகிக்கிறது.**

**அரசாங்கத்துக்கும் அதன் சார்பு அமைப்புகளுக்கும் எதிரானவர்களே கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்படுகிறார்கள். இவற்றில் ஈடுபடுவோருக்கு தண்டனை விலக்கு அளிக்கப்படுகிறது.**

**இவ்வாறு அறிவித்துள்ளது, ஹொங்ஹொங்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு.**

இன்று ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி, காணாமற்போனோர் சர்வதேச தினமாகும். அதனை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே ஆணைக்குழு மேற்சொன்ன தகவல்களை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு அடுத்ததாக, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பங்களதேஷ், நேபாளம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலும் அரச ஊக்கு விப்புகளுடன் வல்வந்த ஆள் கடத்தல்கள் மூலம் மக்கள் காணாமற்போகச் செய்யப்படுதல் மிகப் பெரும் அளவில் நடைபெற்று வருவதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

மேற்குறிப்பிட்ட நாடுகளில், பகுதிகளில் சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் வல்வந்த ஆள் கடத்தல்கள் மூலம் பொதுமக்கள் காணாமற்போவதைத் தடுப்பதற்கோ,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று புலிகளுடன் சந்திப்பு

கொழும்பு, ஓக.30

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் லாஸ் ஜொகனஸ் சொல்பேர்க் தலைமையிலான குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினரை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றனர்.

கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் வவுனியா சென்ற கண்காணிப்புக் குழுவினர் அங்கிருந்து ஏ-9 வீதியால் தரைமார்க்கமாக கிளிநொச்சியைச் சென்றடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கும் தங்களுக்கும் இடையில் வழமையாக இடம்பெறும் சந்திப்புகளில் ஒன்றே என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## அனைத்துக் கட்சிக் குழுவை இயக்க நேற்று இணக்கம்

கொழும்பு,ஓக.30

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையிலான யோசனை ஆவணத்தைத் தயாரிக்கும் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவைத் தொடர்ந்து செயற்படுத்துவதென நேற்றுமுடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் கூடிய சகலகட்சிகளின் தலைவர்களும் ஒன்றுபட்டு இந்தமுடிவுக்கு வந்துள்ளனர்.

அமைச்சரும் பேராசிரியருமான திஸ்ஸ

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தரம் 1 மாணவர் அனுமதி தொடர்பான சுற்றுநிருபம் இறுதி செய்யப்பட்டது

கொழும்பு, ஓக.30

தரம்-1 வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றுநிருபம் நேற்று உயர்நீதிமன்றில் இறுதி செய்யப்பட்டது.

அந்தச் சுற்றுநிருபத்தை, அங்கீகாரத்துக்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் படியும், அதில் ஏதேனும் மாற்றங்களைச் செய்ய அமைச்சரவை தீர்மானிக்குமாயின் அது குறித்து மீண்டும் உயர் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தும் படியும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த விவகாரம் நேற்று மீண்டும் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, ஜெகத் பாலபட்டபெந்தி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது சுற்றுநிருபம் இறுதி செய்யப்பட்டது. அதன்படி மாணவர் அனுமதிக்கு புள்ளியிடும் விவகாரம் பின்வரும் முறையில் அமைய வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

* பாடசாலைக்கு அயலில் குடியிருப்பு அல்லது பழைய மாணவர்களின் பிள்ளை என்பதற்கு - 20 புள்ளிகள். (இதில் ஏதோ ஒன்றிற்கு மட்டுமே ஒருவர் உரிமை கோர முடியும்).
* சம்பந்தப்பட்ட பிள்ளையின் விவேகம் உட்பட செயற்றிறனுக்கு -20 புள்ளிகள்.
* சகோதரர்கள் அதே பாடசாலையில் கல்வி கற்றல் - 05 புள்ளிகள்.
* பெற்றோர் படை நடவடிக்கைகள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ரூ. 3400 கோடிக்கு ஆயுதக் கொள்வனவு மற்றோர் ஊழலுக்கு தயார் என்கிறது ஐ.தே.க.!

கொழும்பு, ஓகஸ்ட் 30

ராஜபக்ஷ அரசு இந்த வருட இறுதிக்குள் மேலும் 30 கோடி அமெரிக்க டொலர் (சுமார் மூவாயிரத்து நானூறு கோடி ரூபா) பெறுமதியான யுத்தத் தளபாடங்களை விமானப் படையினருக்குக் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் மற்றொரு ஊழல் மோசடிக்கு ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- இவ்வாறு குற்றம் சுமத்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் வர்த்தகம் கட்டுமட்டில்லாமல் தொடர்வதாகவும் சீறியிருக்கின்றது.

'மிக்' ரக யுத்த விமானக் கொள்வனவில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடுக்கி விடப்படாத நிலையில் மீண்டும் ஒரு ஊழல் நடவடிக்கையில் ஈடுபட அரசு முடிவெடுத்துள்ளது என்றும் ஐ.தே.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ராஜபக்ஷவின் குடும்பம் ஈடுபட்டுவரும் தொடர் வர்த்தக நடவடிக்கையில் ஒன்றே

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறியோர் அரசின் முடிவுக்கு எதிராக வழக்குத் தொடர்வர்

கொழும்பு, ஓக.30

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து வெளியேறியவர்களை, உள்ளகப் பயிற்சிக்காக வடக்கு - கிழக்கில் நியமிப்பது என்று சுகாதார அமைச்சு எடுத்துள்ள முடிவுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசின் முடிவைக் கண்டித்து சுகாதார அமைச்சு முன்பாக நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து, இத் தீர்மானம் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு எடுத்துள்ள முடிவு திறமை அடிப்படையில் நியமனம் பெறும் வாய்ப்பை இழக்கச் செய்கின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்களைப் படையில் சேர்க்க கருணா குழுவுக்கு இராணுவம் உதவியது குறித்து விசாரிக்கக் குழு

கொழும்பு, ஓக்.30

அரசாங்கத்துக்குச் சார்பான கருணா குழு, தனது படையணியில் சேர்ப்பதற்காக சிறுவர்களைக் கடத்துவதற்கு அரசாங்கப் படையினர் உதவினர் என்ற குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு குழு ஒன்றை நியமிக்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

"சிறுவர்களை கடத்தி ஆயுத மோதலில் ஈடுபடுத்துவதற்குப் பயிற்சி அளித்தலை விசாரிக்கும் குழு ஒன்று நியமிக்கப்பட இருப்பதாக மனித உரிமைகள் அமைச்சு நேற்று அறிவித்தது.

ஐ.நா.சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு கூடுவதற்கு ஒரு வாரமே இருக்கும் இவ்வேளையில் அரசு சிறுவர் உரிமை மீறல் குறித்த விசாரணைக் குழுவை

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அல்வாயிலும் திக்கத்திலும் நேற்று படையினர் மீது தாக்குதல்கள்

உடுப்பிட்டி, ஓக.30

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலயச் சூழலில் திடல் என்னும் இடத்தில் சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இளைஞனின் சடலம் நேற்று மாலை பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் வெடிச் சத்தங்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதேவேளை -

நேற்றுக் காலை 8 மணியளவில் திக்கம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக கருணா அணியின் 10 பணிமனைகள்

கொழும்பு, ஓக்.30

கிழக்கு மாகாணத்தைப் படையினர் புலிகளிடமிருந்து மீட்டதை அடுத்து கருணா அணியினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்து அலுவலகங்களைப் புதிதாகத் திறக்கவுள்ளனர் எனப் புலனாய்வுத் துறையினர் அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள்.

இவற்றில் மூன்று அலுவலகங்களை மட்டக்களப்பில் கரடியனாறு, வாகரை மற்றும் கொக்கட்டிச்சோலை பிரதேசங்களில் நிறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மட்டக்களப்ப

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பங்கின் முன்னாள்
பங்குத் தந்தையாகவிருந்து
பங்கின் முன்னேற்றத்துக்காக
அரும்பணியாற்றிய
அருட்தந்தை
**பஸ்தியாம்பிள்ளை**
**பிரான்சிஸ் பொனிபஸ்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களுக்கும் எம் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

புனித கதிரைமாதா ஆலய
சில்லாலை. பங்குத்தந்தையும் பங்கு மக்களும்.


## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

2008 A/L கணித, உயிரியல் பிரிவு

**Day Class**

2007 A/L பரீட்சைக்குத் தோற்றிய
மாணவர்களுக்குரியது.
**எமது வழமையான ஆசிரியர் குழு.**
ஆரம்பமாகிவிட்டது.
திங்கள் காலை 9 மணி.

## SPECIAL ENGLISH

**An Integrated Course**

* பேச, வாசிக்க, எழுத
* துரித, விரிவான போதனை
* இலக்கண - இலக்கியமயமான கற்கைநெறி
* ஆரம்ப நிலையிலிருந்து
* அனைவருக்கும் உரியது

ஆரம்பம்: 02.09.2007 மு.ப.10-12 வரை

ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம்

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (சி.53506)


## நினைவலைகள்

தாய் மடியில் 05 . 10 . 1981



தாய் மண்ணில் 17 . 08 . 2007

**விஜயபாலன் விஜயநகுலன்**

(பிரியன்)


*மண்ணிடை வந்த மானமுத்து*
*மணலிடை அவமாய் புதைந்த மணிமுத்து*
*மனதிடை என்றும் உனை நினைத்தோம்*
*உன்பணி என்றும் எம்நிழல் தொடரும்...*

**வடமராட்சி**
**நண்பர்கள்.**

(64329)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08 . 10 . 1951



இறப்பு 10 . 09 . 2006

**அமரர் இராமலிங்கம் பஞ்சாட்சரம்**

(யா/மாநகரசபை சுகாதார மேற்பார்வையாளர்)
திதி 30.08.2007

காவியத் தலைவனாய் நீயிருந்து
காட்டிய பாதையில் நாமிருப்போம்
கடலலைபோல் உங்கள் நினைவு
ஓயாமல் நிலைத்திருக்கும் இதயமதில் என்றும்.

6, மணல்தறை வீதி, சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (64331)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### *சின்னத்தம்பி நவரத்தினம்*

ஏழாலை தெற்கு, விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வ[illegible]விடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நவரத்தினம் 29.08.2007 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - பாறுப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சாரதாதேவி, சோதிநாத்ன் (கனடா) காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் சிவானந்தநாதன் (கனடா), தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலாயுதபிள்ளை (பதவி நிலை உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (கனடா), கனகராணி (கனடா), ராகினி (ஆசிரியை, கலட்டி அமெரிக்கமிஷன் த.க.பாடசாலை) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சு.வேலாயுதபிள்ளை**
*(மருமகன் - பதவிநிலை உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்).*

*'சாரதா இல்லம்'*
*ஏழாலை கிழக்கு, ஏழாலை.*
*0776578125*

### Rev.FR.B.F.*பொணிபஸ்*



யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்தவரும் கரம்பொன்னைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்தந்தை Rev. FR.B.F. பொணிபஸ் 27.08.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை இராஜதுரை - பிறிஜட் (குணமணி) தம்பதியரின் அன்புமகனும் அஞ்சலோ, யோண்பீட், ஜெயசீலி, அன்ரன், வசந்தி, சாந்தி, கனிபல், சுகந்தி ஆகியோரின் அருமைச் சகோதரனும், றீற்றா, ஜொய்சி, காலஞ்சென்ற சந்திரன், யூக்கலிஸ்ரா, மரியநாயகம், லூர்துதாஸ், வசந்தா, இன்பநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (31.08.2007) வெள்ளிக்கிழமை பொரளை A.F.றேமன் மலர்சாலையிலும் நாளைமறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பேராயர் இல்லத்தின் சிற்றாலயத்திலும் வைக்கப்பட்டு, முற்பகல் 10 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், அருட்தந்தையர், அருட்கன்னியர் மற்றும் பங்குமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(64342)

### தவறிவிட்டது

கந்தசுவாமி பாலசுப்பிரமணியம், V.H.ஒழுங்கை, இருபாலை கிழக்கு, கோப்பாய் என்னும் விலாசமுடைய தே.அ.அட்டை (710831572V), விசேட அ.அட்டை (0903027687) கரந்தன் சந்திக்கும் அல்வாய்க்கு இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குறிப்பிட்ட விலாசத்தில் தந்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


### Jaffna College Undergraduate Dept

464, Hospital Road,
Jaffna.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**

GAQ, BA (I), BA (final), 1st in com, BCom (I & II & III)

வங்கியில் வேலைவாய்ப்பை பெறுவதற்கான
வங்கியியல் கற்கைநெறிகள்

**DBF & CBF**

AAT I, II & III வகுப்புகள் நடைபெறுகின்றது
2007 June பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பெறுபேறுகளை ...

Ceylon Medical College Council
External Pharmacist Examination
வகுப்புகள் நடைபெறுகின்றன

Spoken Sinhala & GCE O/L

Director


### கணனி போதனாசிரியர்கள்

*யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்*
*446, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

மேற்படி எமது நிறுவனத்தில் கணனிப் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. கூடிய தகைமையுடையோர் விரும்பத்தக்கது. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி : 05.09.2007

விண்ணப்பங்களை தலைவர், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், 446, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தபால் மூலமாகவோ நேரடியாகவோ கையளிக்கவும்.

(64332) கௌரவ செயலாளர், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

911 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு **02 35 45 49**

**28-08-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4258899 - 4269712

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 229,528 | 10/- | 2,295,280/- |
| 2 இலக்கங்கள் | 21,166 | 20/- | 423,320/- |
| 1 இல. + லக்கினம் | 20,845 | 30/- | 625,350/- |
| 2 இல. + லக்கினம் | 1,923 | 100/- | 192,300/- |
| 3 இலக்கங்கள் | 567 | 500/- | 283,500/- |
| 3 இல. + லக்கினம் | 55 | 5,000/- | 275,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 5,294,750/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,092 | | 6,318,250/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 4265503-8-23 |
| மாத்தறை | 4260282-3-10 |
| திருகோணமலை | 4263293-9-83 |
| களுத்துறை | 4266306-5-49 |
| கொழும்பு | 4268903-8-44 |


வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## மரண அறிவித்தல்கள்

### *வல்லிபுரம் கிருஷ்ணராசா*

*(கார்க்காரப் பிள்ளையார்)*



கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஷ்ணராசா 28.08.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும் சந்திரயோகினி, இந்திரராணி, இந்திரகுமார் (சுவிஸ்), அமரர் ரவிக்குமார், சிவகுமார் (ஜேர்மனி), செல்வக்குமார் (சுவிஸ்), செல்வயோகினி (கனடா), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கிருஷ்ணபிள்ளை, அமரர் சிதம்பரநாதன், சாந்தகுமாரி (சுவிஸ்), பத்மகுமாரி, சுபத்திராதேவி (ஜேர்மனி), ஜெயராணி (சுவிஸ்), சதாநந்தி (ஜேர்மனி), சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ராசாத்தியின் அன்புச் சகோதரனும் கஜேந்திரன், செந்தூரன், கோகிலன், யணார்த்தனி, திபானி (கனடா), பிரதீபன் (லண்டன்), றஜனி, நிரோசன் (சுவிஸ்), விதுசன் (சுவிஸ்), டிலுஷா (சுவிஸ்), ரஜீவன் (கனடா), ரஞ்சுதன், வேனுஷா (சுவிஸ்), யதுசா (சுவிஸ்), மதுமிதா (கனடா), ஹரிசன் (கனடா), காருஷா (ஜேர்மனி), நதுர்ஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் சோபிகா, நிரூபன், தனுசன், கயூரி, பிரீத்தி, சஞ்ஜேகஜல், நரேன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (64330)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### *திருமதி இரத்தினம் சீவரத்தினம்*

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சீவரத்தினம் நேற்று (29.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - அமிர்தம் தம்பதியரின் மகளும் சீவரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற சோமநாதபிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2007) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் தாமரைவீதி, வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமரை வீதி, வண்.வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.* (64341)

தகவல்:
**சி.கணேசமூர்த்தி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வாகனத் தொடரணி நடைமுறை; மக்களின் அவசர பணிகளைப் பாதிக்கின்றது

## விடுதலைப் புலிகள் கண்டித்து அறிக்கை

கிளிநொச்சி, ஓக.30

குடாநாட்டில் இராணுவ வாகனத் தொடரணி செல்லும்போது, வீதிகளில் மக்களின் நடமாட்டத்துக்கு தடைசெய்யும் நடைமுறையை விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவ வாகனத் தொடரணி செல்லும்போது பொதுமக்கள் நடமாடக்கூடாது என்று குடாநாட்டில் இராணுவம் வானொலியூடாக அறிவித்தல்களை விடுத்துள்ளது. இதனால் வாகனத் தொடரணி செல்லும் நேரத்தில் பொதுமக்கள் மருத்துவ சிகிச்சைக்கோ அல்லது அவரசத் தேவைகளுக்கோ நடமாடமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இராணுவ வாகனத் தொடரணி கடந்து செல்ல வழமையாக ஒன்றரை மணி நேரமாகும். வீதிகளில் குழந்தைகள் இருக்கும் போது இராணுவ வாகனத் தொடரணி சென்றால் அவர்கள் அடையாளம் காணமுடியாத ஓர் இடத்தில்தான் பதுங்க வேண் டிய நிலைமை ஏற்படும். இது அவர்களுக்கு கடும் ஆபத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் கொழும்பு நகருக்கு அடுத்தாற்போல் 6 இலட்சம் மக்கள் வசிக்கும் பிரதேசம் யாழ்ப்பாணமாகும். இருப்பினும் படைத்தரப்பு அந்த மக்களினது உரிமைக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டு வருகிறது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (202)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர் முன்பள்ளிச் சிறார்களிடையே நடத்திய வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட சிறார்களையும் - நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் சிறாருக்கு பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (207)

### பழமை வாய்ந்த மரங்கள் தறிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

உடுவில் பிரதேச செயலர்பிரிவில் காங்கேசன்துறை வீதியோரங்களில் உள்ள சுமார் 75 ஆண்டுகளுக்கு முந்திய மரங்கள் பலவும் தறிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாள்களாக இந்நடவடிக்கை முழு மூச்சாக இடம்பெற்றுவருவதையிட்டு பொதுமக்களும் பொது அமைப்புகளும் விசனம் தெரிவிக்கின்றன.

இணுவில், மருதனார்மடம், றொட்டியாலடிப் பகுதிகளில் இருந்த மரங்களே அடியுடன் தறித்து எடுத்துச்செல்லப்படுகின்றன. (202-68)

### தென்மராட்சி மாணவர்களுக்கு சமய அறிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவருக்கான சமய அறிவுப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சைவம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய பாடங்களிலேயே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் அன்றையதினமே நடத்தப்படவுள்ளதால் இவ்வகுப்புகளில் சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-207)

### யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிய குழந்தை வைத்திய நிபுணர்

யாழ்ப்பாணம், ஓக.30

லண்டனில் குழந்தை வைத்திய நிபுணருக்கான மேற்படிப்பை பூர்த்தி செய்த டாக்டர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரிவதற்கு கடந்த 24ஆம் திகதி கொழும்பில் இருந்து வருகை தந்துள்ளார்.

வைத்திய நிபுணர் கணேசலிங்கம் அருள்மொழி என்பவரே இவ்வாறு வருகைதந்துள்ளார். யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவரான இவர் அண்மையில் குழந்தை வைத்திய நிபுணருக்கான மேற்படிப்பைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு சென்றிருந்தார். (203)

### சனசமூக நிலையத் திறப்பு விழா

வடமராட்சி, ஓக.30

அறிஞர் கந்த முருகேசனார் நினைவாக சனசமூக நிலையம் ஒன்று இன்று முற்பகல் 10 மணிக்கு புலோலி தென் மேற்கில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் நிலையத்தைத் திறந்து வைப்பார். (1-160)

நீதிமன்றம் அறிவுறுத்தலை விடுத்தபோதும்

# வர்த்தக நிறுவனங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை என மக்கள் முறைப்பாடு

நல்லூர், ஓக.30

அத்தியாவசியப் பொருள்களின் விலை விவரங்களுடன் பட்டியலை காட்சிப்படுத்த வேண்டும் என்று யாழ்.அரச அதிபர், நீதிமன்ற நீதிவான் ஆகியோர் அறிவுறுத்தல்களை விடுத்திருந்தனர். ஆனால் பல வர்த்தக நிறுவனங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படவில்லை.

நுகர்வோர் மேற்கண்டவாறு முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அதிகரித்த விலையில் விற்கப்படுவதைத் தடுக்கும் வகையில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படுவது கட்டாயம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனினும் பல வர்த்தக நிறுவனங்கள் அதனைப் பின்பற்றுவதில்லை.

சில வர்த்தகர்கள் தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களுக்குப் பற்றுச் சீட்டுகளுக்குப் பதிலாக வெற்றுக் கடதாசிகளில் பொருள்களின் விலைகளைக் குறித்து நுகர்வோருக்கு வழங்குவதாக முறையிடப்படுகின்றது.

அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் இல்லை எனப் பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் கூறப்படுகின்றது. எனினும் தமக்கு நன்கு பரிச்சயமானவர்களுக்கு அதே பொருள்களை வழங்குகின்றனர். அதற்கான பற்றுச்சீட்டை வழங்காது வெற்றுக் கடதாசிகளில் விலைகளைக் குறித்துக் கொடுப்பதை அவதானிப்பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

நிர்ணயித்த விலைகளுக்கு மேலதிக விலையில் பொருள்களை விற்பனை செய்யும் போதும் இவ்வாறான வெற்றுக் கடதாசியில் எழுதப்பட்ட பற்றுச்சீட்டுகளே வழங்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுக்கின்றனர். இதேவேளை-

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் குடும்ப அட்டைக்கு ரவை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் சில கிளைகளில் ரவை இல்லை எனத் தெரிவித்து வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. (202-111)

### வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி நடவடிக்கை தொடர்பான முதலாவது கூட்டம்

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் உள்ளூராட்சி சபை நடவடிக்கைகள் தொடர்பான முதலாவது கூட்டம் கடந்த 23 ஆம் திகதி வரோதயநகர், கன்னியாவில் இடம்பெற்றது.

மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு வீதி அபிவிருத்திக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

உள்ளூராட்சி சபை ஊழியர்களின் நலன் சார் விடயங்கள், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (202-95)

# அபிவிருத்திக் கற்கை நெறியின் பரீட்சை முடிவுகள் விரைவில்

யாழ்ப்பாணம்,ஓக 30

யாழ். பல்கலைக்கழக அபிவிருத்திக் கற்கைநெறியின் முதல் அரையாண்டு பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளன.

முதுமாணி அபிவிருத்தியில் சனத்தொகை, முதுமாணி அபிவிருத்தியில் பிராந்திய திட்டமிடல், முதுமாணி அபிவிருத்தி ஆகிய கற்கை நெறிகளுக்கான முதல் அரையிறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளே வெளியாகவுள்ளன.

மேற்படி அபிவிருத்திக் கற்கை நெறிகள் முதன் முதலாக பட்டப் படிப்புகள் பீடத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (202-95)

### பதவிவெற்றிடங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.30

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலத்தில் நிலவும் தகவல் தொழில் நுட்பவியல் உதவியாளர் பதவிக்குப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் அமைச்சு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் தகவல் தொழில் நுட்பத்துறையில் அல்லது தகவல் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதுடன் ஆங்கிலத்தில் பணியாற்றுவதற்கான ஆற்றலும் கொண்டிருக்கவேண்டும். விண்ணப்பங்ளை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 24.08.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-86)

### சமய சந்நிதியில்

வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய்ப்பிள்ளையார் ஆலய மணவாளக் கோல தினவிழா இன்று நடைபெறவுள்ளது.

நாட்டின்நிலைமை சீரின்மையால் புலோலி மேற்கு வத்தனைப்பிள்ளையார் ஆலயத்தில் பல வருடங்களாக உற்சவ மூர்த்திகள் வைத்து ஆதரிக்கப்படுகின்றன. அங்கேயே இவ்விழா நடைபெறும் என்று ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ இ.மண்டலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (203-155)

* * *

வண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் மணவாளக் கோல விழாவும் நாளை இடம்பெறவுள்ளது.

மு.ப. 11மணிக்கு அஷ்டோத்திர சங்காபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (203)

# எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் விசேட அ.அட்டை பெற விண்ணப்பிக்குக

## பலாலி பாதுகாப்புத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

குடாநாட்டில் நிரந்தரமாக வதியும் 10 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் விசேட அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது குடாநாட்டில் இடம்பெறும் பாதுகாப்பு நிலைவரங்கள் கருதி யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தினால் குடாநாட்டில் 10 வயதிற்கு மேற்பட்ட நிரந்தரமாக வசிப்பவர்களுக்குப் புதிய அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக உங்களின் முழுப்பெயர், நிரந்தர வசிப்பிடம், முகவரி, தேசிய அடையாள அட்டையின் இலக்கம், தொழிலும் தொழில் புரியும் இடமும், கிராமசேவையாளர் பிரிவு ஆகிய விடயங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் தங்களுக்கு வழங்கப்பட்டதும் அதைப் பூர்த்தி செய்து பிரதேச செயலாளர் அல்லது கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அண்மையில் உள்ள இராணுவ முகாமில் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் அப்படிவத்துடன் அண்மையில் எடுக்கப்பட்ட முத்திரை அளவிலான 2 புகைப்படங்களையும் வழங்கவேண்டும்.

மேலும் தாங்கள் புகைப்படங்கள் எடுத்த பற்றுச்சீட்டுகளையும் ஒப்படைத்தால் அதற்கான பெறுமதியை உங்களின் கிராம சேவையாளர் மூலம் பெற்றுத்தர முயற்சி எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம்.

இப்புதிய அடையாள அட்டை எதிர்காலத்தில் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கு கட்டாயம் தேவை. விமான, கப்பல் மூலம் இப்பிரதேசத்தில் இருந்து செல்லும் போதும், மீண்டும் இப்பிரதேசத்திற்கு வரும்போதும் இப்புதிய அடையாள அட்டை உரிமையாளரிடம் கட்டாயம் இருக்கவேண்டும். இது பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அவர்களின் கடமைகளுக்கு இலகுவான முறையில் இடம்பெறும் எனவும் அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (203)

# சண்டிலிப்பாய் கமநல நிலையத்தை யாழ்.அரச அதிபர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஓக.30

நிக்கொட் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சண்டிலிப்பாய் கமநல சேவை நிலையத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இத் திறப்பு விழாவிற்கு [illegible] அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம். பற்றிக் டிறஞ்சன் தலைமை வகித்தார்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். அரச அதிபர், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பிராந்திய பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரத[illegible] தரணி இ.வசந்தசேனன் ஆகியோர் கலந்துகொண்டனர். (202-135-95)

### காரைநகரில் கால்நடை வைத்தியசேவை

வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரியினால் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் முற்பகல் வேளையில் காரைநகர் கமநல சேவை நிலைய கட்டடத்தில் வைத்து கால்நடைகளுக்கான இலவச வைத்திய சேவை மற்றும் வைத்திய ஆலோசனை என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகவலை வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் த.பிரபாகரன் தெரிவித்தார். (202-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு



உயர்திரு. வேலுப்பிள்ளை சடாச்சரமூர்த்தி
(மின் அத்தியட்சகர்)

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு 18 வருடங்களாக அளப்பரிய சேவையினை வழங்கி இன்று (30.08.2007) வியாழக்கிழமை 60 ஆவது அகவையில் கால் பதிக்கும் இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி மின்பாவனையாளர் அலுவலக மின் அத்தியட்சகர் உயர்திரு. வே.சடாச்சரமூர்த்தி அவர்களை உளமாரப் பாராட்டுவதுடன், மேலும் பல ஆண்டுகள் பிரதேச மக்களுக்கு உயரிய சேவைகள் வழங்க வேண்டுமென உளமார வாழ்த்துகின்றோம்.

**உத்தியோகத்தர்கள்,**
**இலங்கை மின்சார சபை,**
**சாவகச்சேரி.**

(சி/53485)

## தவறிவிட்டது

வரணி, யற்றாலையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி தனுசியா என்பவருடைய தே.அ.அட்டை (887220328V) திருநெல்வேலிக்கும் - நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (64314)

## மணமகள் தேவை

1970ஆம் ஆண்டு, சுவாதி, செவ்வாய் இல்லாத Chartered Accountant ஆக London இல் தொழில் செய்யும் இந்து கௌரவ மணமகனிற்கு அழகிய வெளிநாட்டு P.R. உடைய மணமகள் தேவை. குறிப்பு. படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை. இல.9. சங்கிலியன் வீதி,நல்லூர். (64316) தொ.பே.021 4591417

கணபதி துணை

தெல்லிப்பழை - பன்னாலை

திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான

## வருடாந்த மஹோற்ஸவ விஞ்ஞாபனம்



**சர்வசித்து வருடம் 2007**

ஆரம்பம் – நாளை 31.08.2007 வெள்ளிக்கிழமை
நிறைவு – 11.09.2007 செவ்வாய்க்கிழமை.

### விசேட உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| 31.08.2007 | வெள்ளி | மு.ப. 10.30 மணி - கொடியேற்றம் |
| 07.09.2007 | வெள்ளி | பி.ப. ஒரு மணி - வேட்டைத் திருவிழா |
| 09.09.2007 | ஞாயிறு | பி.ப. 4 மணி - சப்பரம் |
| 10.09.2007 | திங்கள் | மு.ப. 9.15 மணி - இரதோற்ஸவம் (தேர்) |
| 11.09.2007 | செவ்வாய் | மு.ப. 10 மணி - தீர்த்தம் |
| 12.09.2007 | புதன் | பி.ப. 3 மணி - வைரவர் பொங்கல் |

பன்னாலை,
தெல்லிப்பழை.

பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா,
பிரம்மஸ்ரீ ச.கணேசானந்தசர்மா,
திருமதி லலிதா ஷிவானந்தசர்மா,
ஆதீன கர்த்தாக்கள்.

(64210)

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



நீர்வேலியைச் சேர்ந்த
**கிரிதரன்-பாமதி**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**திவிஷன்**



இன்று (30.08.2007) வியாழக்கிழமை 1ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்புத் தாத்தா, அம்மம்மா, அன்பு அப்பா, அம்மா, ஆசை அக்கா, அண்ணா, மற்றும் உற்றார், உறவினர் யாவரும் நீர்வைக் கந்தன் அருள் பெற்று சகல ஐஸ்வர்யங்களுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்...

திருமுருகன் பல்பொருள் அங்காடி,
நீர்வேலி.

தகவல்:
**கிரிதரன்**
*(அப்பா).*

(சி/53497)

## மண மங்கல நல்வாழ்த்து





இன்று (30.08.2007) வியாழக்கிழமை
**நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில்**
திருமண பந்தத்தில் இணையும்

**இ.கேதீஸ்வரன் -சசிகலா**

தம்பதியினரை
இல்வாழ்வில் எல்லா செல்வங்களையும் பெற்று என்றும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்,**
**யாழ்-மத்திய கல்லூரி.**

(64116)

## ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்

IPDT

**Institution of Professional Development For Teachers**

### விசேட கல்வியும் ஆலோசனைச் சேவையும்
### டிப்ளோமா பாடநெறி
### Dip.in Special Education and counselling

அனேகரின் வேண்டுகோள்களுக்கிணங்கவும், எமது பிரதேச பாடசாலைகளின் தேவை கருதியும் மேற்படி ஒரு வருட செய்முறைகள், கள வேலைகளுடன் கூடிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் இத்துறைகள் சார் வள நிலையங்களை உருவாக்கி பல வளவாளர்களைத் தோற்றுவித்து எமது மாணவர்களுக்கு அர்ப்பணிப்பான சேவையை ஆற்ற வேண்டியுள்ளது. ஆர்வமுள்ள ஆசிரியர்கள், குடும்பநல, சுகாதார உத்தியோகத்தர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

- விசேட கல்வியும் உட்படுத்தல் கல்வியும்
- விசேட கல்வித்துறை கருவிகளைக் கையாளுதல்
- விசேட கல்வி மாணவர்களுக்கான நவீன கற்றல் - கற்பித்தல் முறைகள்
- விசேட கல்வி செயற்றிட்டங்கள், செயல் நிலை ஆய்வுகள்
- நெருக்கீடு - முரண்பாடுகளுக்கான முகாமை
- வழிகாட்டலும் ஆலோசனைச் சேவையும்
- வழிகாட்டல் - ஆலோசனைச் சேவைப் பிரயோகங்கள்
- தொழில் வழிகாட்டல் சேவை
- பெற்றார்கள், முதியோர், தேவையுடையோருக்கான வழிகாட்டல் சேவை

ஆகிய விடயங்கள் உள்ளடக்கிய பரந்துபட்ட இத்துறைசார் அம்சங்களைக் கொண்ட பாடநெறி வார இறுதிநாள்களில் நடைபெறும். களவேலைகள், குழுச்செயன்முறைகள், சுயகற்றல், சமர்ப்பிப்புக்கள், விடஆய்வுகள், நேரடியாகப் பாடசாலை - சமூக களங்களில் செயலாற்றுதல், மருத்துவ முகாம் சேவைகள், கல்விச் சுற்றுலாக்கள் என சர்வதேச கல்வி நிறுவகத்தின் தர நிர்ணயங்களுக்கு ஒப்பான கற்றல் தேர்ச்சிகள் இப்பாட நெறியூடாக வழங்கப்படும்.

பாடநெறியில் பயில விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்பி 06.10.2007 ஆம் திகதிக்கு முன்னர் *பணிப்பாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், இல.226 (ஆனந்தா அச்சகம்), கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பிவைக்கவும்.

| இணைப்பாளர் | உதவிப்பணிப்பாளர் | பணிப்பாளர் |
|---|---|---|
| த.சாம்சன்லூரியாட் | த.சிவகுமார் | பா.தனபாலன் |
| B.A.Dip.in Ed.(merit), MEd. | B.A.Dip. in Teaching, | B.A. (Cey.), PGDE (Merit), |
| அதிபர், | Dip. in Psy. (1st class), | Dip. in Psy. ( 1st class), |
| யா/நைதர் நீல் பாடசாலை. | T.P.: 0776184250 | Dip. in Guidance and Counseling, |
| | | Dip. in Education |
| | | Cert. in Vocational Guidance |
| | | (Singapore). |

(64310)

## ருது சோபன உதகசாந்தி அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் இன்று (30-08-2007) வியாழக்கிழமை காலை 8.25 மணி முதல் 9.11 மணிவரை வரும் உத்தரட்டாதி நட்சத்திரமும் துதியைத் திதியும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புத்திரி திருவளர் செல்வி
**கிருஷாந்தி (சிந்து)**

அவர்களுக்கு எமது இல்லத்தில் ருதுசோபன உதகசாந்தி வைபவங்களை நடத்த எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து எங்கள் மங்களச்செல்வியை ஆசீர்வதித்து, வாழ்த்தி எங்களை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி பேச்சி அம்மன் கோயில்,
வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 0774016488

தங்கள் நல்வரவை விரும்பும்:
பிரம்மஸ்ரீ சு.பாலகணேசஷர்மா,
ஸ்ரீமதி ஹேமலதா (கணேஸ்).

(64221)

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் இன்று (30.08.2007) வியாழக்கிழமை காலை 8.25 மணி முதல் 9.11 மணிவரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சந்திரகுமார்**
*(சந்திரன்)*
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைசெல்வி
**அமுதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும் சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மணமகன் இல்லத்தில் 31.08.2007 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.**

*இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்*

திரு.திருமதி பு.முருகையா
குடும்பத்தினர்,
71, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.



திரு.திருமதி இ.நாகேந்திரன்
குடும்பத்தினர்,
ரஜனி மஹால்,
இத்தியடி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(64301)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் மேலதிக சிங்களக் குடியேற்றங்கள்

கொழும்பு, ஒக. 29

திருகோணமலையில் உள்ள தமிழ் மக்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மூதூரின் கிண்ணியாப் பிரதேசத்தில் உள்ள சுண்டையாற்றுப் பகுதியில் கந்தளாய்ப் பிரதேசத்தில் உள்ள ஒரு தொகுதி சிங்கள மக்களைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றன என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே புல்மோட்டைப் பிரதேசத்திலும் மொறவெவப் பகுதியில் அங்கவீனர்களான இராணுவத்தினரின் குடும்பங்களை குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அ'புரத்தில் தமிழர்கள் இருவர் கைது

கொழும்பு, ஒக. 30

வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும், முல்லைத்தீவைச் சேர்ந்த யுவதி ஒருவரும் அநுராதபுரம் ரயில்வே நிலையத்தில் வைத்து சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் ஓட்டோ ஒன்றில் அநுராதபுர நகரைச் சுற்றிப் பார்த்து விட்டு ரயில் நிலையத்தில் இறங்கியவேளையில் இவர்களைப் பொலிஸார் சந்தேகத்தில் விசாரணை நடத்தினர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தாமல் இருந்ததால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர் என்றும் இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க இன்னமும் காலம் கடந்துவிடவில்லை

## நோர்வே முன்னாள் அமைதித்தூதுவர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 30

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்பாடு பெரும்பாலும் முறிந்துவிட்ட நிலையை அடைந்திருந்தாலும்கூட இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கானகாலம்இன்னமும்கடந்துவிடவில்லை என்று நோர்வேயின் முன்னாள் அமைதித் தூதுவர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இன்னும் காலம் கடந்துவிடவில்லை. இருதரப்பும் மீண்டும் உண்மையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என்று முன்னாள் நோர்வே அமைதித்தூதுவரான ஜோன் கொலன்ட் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

1990ஆம் ஆண்டு முற்பகுதியில் இலங்கையில் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவரான நோர் வேயின் முன்னாள் பிரதி வெளிநாட்டமைச்சர் கொலன்ட் தமது பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:

இப்பொழுது என்ன செய்யலாம் என்றால், இரு தரப்பினரும் சொல்லவேண்டும், ''நாங்கள் இனி இருந்து பேச வேண்டும், இந்த பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பது நன்றாகவே நிரூபணமாகிவிட்டது. இதை நிரூபிக்க ஒரு தலைமுறை காலத்தையே நாம் கடந்து வந்து விட்டோம். எனவே இப்பொழுது எதிர் காலத்தை எண்ணிபார்க்க வேண்டிய காலம் வந்து விட்டது. சமாதான சகவாழ்வுக்கான உடன்பாடு ஒன்றுக்கு வந்தாகவேண்டும்'' அது தான் ஒரே வழி என்று கூறியுள்ளார் கொலன்ட். மேலும் கூறுகையில் இருதரப்பின் மீதும் சர்வதேச அழுத்தம் அதிகரிக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் போலவே தலைவர்கள் என்ற முறையில் நீங்கள் பொது மக்கள் தொடர்ந்தும் துன்புறுவதை அனுமதிக்கக்கூடாது என்று அவர்களுக்கு சர்வதேச சமூகம் இடித்துக் கூற வேண்டும் என்றார். (ப)

# எச்.எஸ்.பி.ஸி. வங்கியிடம் கடன் வாங்கும் அரசின் திட்டத்திற்கு எதிராகத் தொடர் ஆர்ப்பாட்டம்

## நாடளாவிய ரீதியில் இன்று தொடக்கம் ஏற்பாடு

எச்.எஸ்.பி.ஸி.வங்கி இலங்கை அரசிற்கு வர்த்தகக் கடன் வழங்கத் தீர்மானித்திருப்பதைக் கண்டித்து, அத்தீர்மானத்தை உடனடியாகக் கைவிடுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் தொடர் போராட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இன்றுமுதல்இப்போராட்டங்களைநடத்துவதற்கு அக்கட்சி முழு ஏற்பாடுகளையும் செய் துள்ளது என்றும் அறிய வருகிறது.

அதன்படி இன்று பிற்பகல் 12.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள எச்.எஸ். பி.ஸி. வங்கியின் இலங்கைத் தலைமையகத்திற்கு முன்பாக முதற்கட்ட ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேதினம் பிற்பகல் 4.30 மணிக்கு வத்தளை கிறிஸ்தவ தேவாலயத்தில் சமய வழிபாடொன்றையும் நடத்துகிறது ஐ.தே.கட்சி.

நாளை இரத்தினபுரியிலும், வெலிமடையிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 2ஆம் திகதி பசறையிலும் பண்டாரவளையிலும் ஆர்ப்பாட்டங்களும் பொதுக்கூட்டங்களும் இடம்பெறும் என ஐ.தே.க. வட்டாரங்கள் தகவல் தந்தன.

எச்.எஸ்.பி. ஸியின் கடன் வழங்கும் திட்டத்துக்கு மக்கள் எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் பெருந்திரளான மக்களை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க 'உதயனு'க்குத் தெரிவித்தார். (சி)

# முன்னாள் சட்டமா அதிபர் நினைவாக சட்டத்துறை புலமைப்பரிசில்

கொழும்பு, ஒக.30

அண்மையில் அமரரான சட்டமா அதி பர் கே.சி. கமலசபேசன் நினைவாக வருடம் தோறும் மத்தியஸ்தம் தொடர்பான கமலசபேசன் நினைவு புலமைப்பரிசில் ஒன்றினை வழங்குவதற்கு வர்த்தக சட்டம் மற்றும் செயற் பாட்டு நிறுவனம் தீர்மானித்திருக்கிறது.

அமரர் கமலசபேசன் (பி.சி.) சட்டத் துறைக்கு ஆற்றியுள்ள மேலான பணிகளை கௌரவிக்கும் வகையில் இந்த நினைவு புலமைப்பரிசில் இவ்வருடம் ஒக்ரோபர் மாதத் தில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றது.

அமரர் கமலசபேசன் வர்த்தக சட்டம் மற்றும் செயற்பாட்டு நிறுவனத்தின் ஓர் உறுப் பினராக இருந்துவந்துள்ளார். இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் வர்த்தக மத்தியஸ் தம் தொடர்பான கற்கைநெறி வருடாந்த டிப் ளோமா வகுப்புகளில் விரிவுரைகளையும் செய்து வந்துள்ளார்.

46 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இந்த புலமைப்பரிசு மிகவும் தகுதி வாய்ந்த ஒரு வருக்கு வருடம் தோறும் வழங்கப்படும். (ப)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

- யோகர் சுவாமிகள்

### நல்லை மான்மியம்

முற்றும் துறந்த முனி; முழுதும் அறிந்த முனி
உற்ற ஒரு சீடனை; உவந்து கண்ட நல்லையிது
கூடியந்த யோகருடன் கூத்தாடிய வீதியிது
ஓடிமிக ஒழித்த ஒப்பற்ற வீதியிது
நல்லைக் கந்தனிவன் நாடி வந்த தேர்முட்டியிது
செல்லப்பர் சிரித்துறுள சீடன் சிரித்த வீதியிது
கந்தனிவன் காட்சிதந்து கூடிதில் மறைந்த வீதியிது
அல்லும் பகலும் தேடி அலைந்த திந்த வீதியிது

யோகமுனி தனித்திருந்து யோக நிஷ்டை செய்த இடம்
தோகை மயில் மால்மருகன் தோன்றியதும் இந்த இடம்
செல்லப்பரைச் சூழ்ந்து சித்தர் தரிசித்த இடம்
நல்லை முருகனிவன் நல்ல அடி பட்ட இடம்
அல்லல் நீங்குமிடம் அரியவினை போகுமிடம்
இந்த இடம்போன்ற இடம் இல்லையடி ஈழத்தில்
வந்து நிதம் பணிந்திட்டால் வரமனைத்தும் தந்திடுவான்
கந்தனிவன் எங்கள் கலியுகத்தின் கடவுளடி

- விகடகவி.

ஓசை ஒளியாலே ஊற்றாகும் உள்ளத்தின்
தேசையெலாம் நல்லூரிற் தேடலாம் - ஆசையுடன்
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாங் கந்தன் கழல்.

இறைமணி சி. இராசரத்தினம்.
(அமரர்)

# ஊடகத்துறையைக் காப்பாற்ற ஜனநாயக அமைப்புகள் யாவும் ஒன்றிணைய வேண்டும்

## மக்கள் ஊடக இயக்கம் அழைப்பு

கொழும்பு, ஒக. 30

ஜனநாயக அமைப்புகள் - அரசியல் கட்சிகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்கள் - யாவும் ஊடகத்துறையினருடன் ஒன்றிணைந்து ஊடக மற்றும் ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாக்க குரல் எழுப்ப முன்வரவேண்டும்.

மக்கள் ஊடக இயக்கம் இவ்வாறு அழைப்பொன்றை விடுத்துள்ளது. அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் சர்வதேச புகழ்பெற்ற பாதுகாப்புத்துறை விமர்சகரும், ஆலோசக ஆசிரியருமான இக்பால் அத்தாஸ் மீது விடுக்கப்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தலானது ஜனநாயக சமூகமொன்றில் தகவல் வெளியிடும் உரிமை மீதான அச்சுறுத்தலாகவே இவ் வியக்கம் கருதுகின்றது. மிக் 27 கொள்முதல் தொடர்பான தகவல்களை வெளியிட்டமைக்காகக் கடந்த காலத்தில் அவருக்கு வழங்கப்பட்டு வந்த அரச பாதுகாப்பு வாபஸ்பெறப்பட்டுள்ளது. அத்தாஸ் எழுதும் கள நிலைவரம் தொடர்பான கட்டுரையை சிங்களத்தில் மொழி பெயர்த்துவெளியிட்ட லங்காதீப மாகாண ஆசிரியர் டபிள்யு. ஜே. குணரட்ணவும் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளார். மூன்று மாதங்களுக்கு முன் அத்தாஸ் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்றும் அச்சுறுத்தப்பட்டுள்ளது. இதேபோல் தமிழ் பத்திரிகையாளர் ஒருவரும் அண்மையில் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறு ஊடகத்துறையினர் இப்போதைய ஆட்சியின் கீழ் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர். துரதிஷ்ட வசமாக இதுவரை காலமும் ஊடகத் துறையினர் தமது பாதுகாப்புக்காக அரசாங்கத்தை எதிர்த்து செயற்படாமல் இருந்து வந்துள்ளனர். அறிக்கைகள் விடுவது மற்றும் நகரில் ஆர்ப்பாட்டம் செய்வது மட்டும் போதாது. நாம் இப்பொழுது மிக பாரதூரமான ஒரு காலகட்டத்தில் இருக்கின்றோம்.

ஜனநாயக சமூகமுறையையே இது அச்சுறுத்துவதாக உள்ளது. ஊடகத்துறைக்குள் இருப்பவர்கள் மட்டுமின்றி ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அனைவருமே இந்த அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே ஊடக சுதந்திரத்தையும் பத்திரிகையாளர்களின் உயிர்களையும் காப்பாத்துவதற்காக ஜனநாயக வழியில் பரந்த அளவில் கூட்டிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## எமது ஆத்மீக முயற்சிகள் எவ்வாறு இருக்கவேண்டும்?

கூடுமானவரை 'நான்' என்பது ஆத்மாவுக்குச் சம்பந்தப்பட்டது என்றபடி அர்த்தம் செய்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

அவ்வாறு ஆத்மாவுக்கு சம்பந்தப்பட்டதான எண்ணம் உங்களுக்குள் நிலைபெறுமானால் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகமாட்டீர்கள்.

அப்படியே பாதிப்புகள் எழுந்தாலும் மலை போன்ற வேதனைகள் மேகத்தைப் போல மறைந்துவிடும்.



மனம் என்பது சந்திரன். புத்தி என்பது சூரியன். சூரியன் உள்ளவரை சந்திரனைக் காணமுடியாது. சூரியன் இல்லாத போதே சந்திரனைக் காண முடியும். சூரியன் இல்லாத போதே சந்திரனை நாம் நம்புகிறோம். அதேபோல நிஜமான ஆத்ம ஞானம் உள்ளவரை, மனம் என்ற அன்புக்கு நாம் வசமாவதில்லை. (உண்மையின் உண்மை)

சாயி சிந்தனை

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக. 30

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 13ஆம் நாளான இன்று வியாழக்கிழமை 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு' என்னும் தலைப் பில் சைவப் புலவர் நவராஜ் சொற்பொழி வாற்றுவார்.

ஏழாலை நாகபூஷணி அறநெறிப் பாடசாலை, தோண்டமானில் சிவகாமி அம்மாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும். (203-79-111)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுறுத்தலை அடுத்து அத்தாஸின் கட்டுரை வெளியாகவில்லை

கொழும்பு, ஓக.30

சண்டேரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்புத் துறை விமர்சகரும் ஆலோசக ஆசிரியருமான இக்பால் அத்தாஸிற்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பை அரசாங்கம் வாபஸ் பெற்றுக்கொண்டதையடுத்து அவரால் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் எழுதப்படும் பாதுகாப்புத்துறை பற்றிய விமர்சனக் கட்டுரையை அப்பத்திரிகை நிறுத்தியுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டு காலமாக அவருக்கு அளித்து வந்த பாதுகாப்பினை அரசாங்கம் முன் அறிவித்தலின்றி வாபஸ் பெற்றிருப்பதனால் அவரது கட்டுரையை வெளியிடமுடியாமல் போனமைக்கு பத்திரிகை நிர்வாகம் கவலை தெரிவித்துள்ளது.

அவர் தனது உயிருக்கும் தனது குடும்பத்தினருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சுகின்றார். அத்துடன் தாம் பின்தொடரப்படுவதாகவும் கூறுகிறார் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்புத் துறை அமைச்சர் என்ற முறையில் அத்தாஸின் பாதுகாப்புக்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஜனாதிபதியைக் கேட்டுள்ளது. (ப)


வடமராட்சி மாணவர்களுக்கு!!!

IIS இன் 90% Mega Offer

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I 02.09.2007 மு.ப. 10 மணி

பிரிவு II 03.09.2007 மு.ப. 10 மணி

அதிரடிக் கட்டணச் சலுகை

- Diploma in Microsoft Office
- Diploma in Computer Programming
- Diploma in Internet Technology
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Technology

Fast Track Classes

பதிவுகள் அனைத்தையும் 01.09.2007 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

Institute of Informatics Studies
Nelliyady, Karaveddy.
T.P.: 021 226 3335 (64203)



## நன்றி நவிலல்

### சுப்பிரமணியம் சிவஞானரத்தினம்

அராலி தெற்கைச் சேர்ந்தவரும் எமது குடும்பத்தலைவருமாகிய சுப்பிரமணியம் சிவஞானரத்தினம் அவர்கள் 07.08.2007 அன்று மறைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் தந்திவாயிலாகவும் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியை அன்று மலர் வளையம் சாத்தியோருக்கும், இரங்கல் உரைகள் வழங்கியோருக்கும், துண்டுப்பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலிகளை நல்கியோருக்கும் மற்றும் இறுதிச் சடங்கு நிறைவேற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்புள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அராலி தெற்கு,*
*வட்டுக்கோட்டை.* (64306) **குடும்பத்தினர்.**

## அந்தியேஷ்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும் சர்வசித்து வருடம்
ஆடிமாதம்
22.07.2007
ஞாயிற்றுக்கிழமை அன்று
அட்டமி திதியில்
சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்
### சித்திரவடிவேலு சிவானந்தராஜா

*அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை (31.08.2007) வெள்ளிக்கிழமை கெருடாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 6 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

கொட்டியாகாடு,
தொண்டைமானாறு. (64146) சி. இராமச்சந்திரன் குடும்பம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 30 - 03 - 1937



கண்நெகிழ 01 - 08 - 2007

### அமரர் ஆறுமுகம் தியாகராஜன்

*(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)*

''நெஞ்சு இருக்கும் வரையில்
உங்கள் நினைவுகள் இருக்கும்''

நாளை (31.08.2007)வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆறாத்துயரில்:*
'பொய்கை' தி.சரஸ்வதி *(மனைவி)*
புலோலி தென்மேற்கு, *(காணிப்பதிவகம், பருத்தித்துறை),*
புலோலி. உடன் பிறப்புகள், குடும்பத்தினர். (64245)

## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.09.2007 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விற்பனை விலையை 45 ரூபாவாக அதிகரிக்கவுள்ளது. பாலின் உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொதுமுகாமையாளர்,**
யாழ்.மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி.53501)

## தவறிவிட்டது

இராசவீதி சந்திக்கும் நல்லூருக்கும் இடையில் சிறிஸ்கந்தராசா தர்சிகா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (786784182V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய் இராசவீதி சந்தியில் அமைந்துள்ள தேநீர் கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (64328)


## கோழிக்குஞ்சு விற்பனை

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட சிவப்பு, வெள்ளை லேயர் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. அத்துடன் புறொயிலர் குஞ்சு 01-09-2007 பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம், 19,முருகேசர் லேன், நல்லூர். T.P.¦ 6944.

மெகா
கணனிக் கற்கை நெறிகளிற்கான
புலமைப்பரிசில்
75% வரை வெல்லுங்கள்
பரீட்சை அனுமதி இலவசம்
ASIAN-CSC
COMPUTERS
பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு
யாழ்ப்பாணம் : CSC (INTERNATIONAL DIVISION) No-101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கிக்கு மேலாக) Tel 021-222-8196
யாழ்ப்பாணம் : ASIAN- No-2G,ஸ்ரான்லி வீதி, Tel 021-222-5677
நெல்லியடி : ASIAN- கொடிகாமம் றோட், Tel 077-3322198

## விற்பனைக்கு

எம்மிடம் சகல விதமான சொப்பிங் பாக் வகைகள் மலிவு விலையில் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

| லாச் பாக் | சண்சையின் பாக் |
|---|---|
| No I பெரியது | |
| No I சிறியது | 7x 10 |
| No II பெரியது | 7x 5 |
| No II சிறியது | 9x 12 |

A.J.M.,
151, கே.கே.எஸ்.வீதி,
சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம். (64302)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- ராஜீவ்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.
T.P.¦ 222 2867, 222 3529 (64204)

## காணி விற்பனைக்கு

*கொக்குவில் மேற்கு, ஞானபண்டித வித்தியாலயத்திற்கு அண்மையில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. கலட்டி அம்மன் கோயிலுக்கு அண்மையில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.*

தொடர்பு இல: 0774004786
0112728655
56/3, கலட்டிஅம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (64320)

## Study in Singapo e $ Malaysia

- Computer Science
- Computer Engineering
- Engineering (Civil, Electrical $ Electronice, Mechanical)
- Hotel Management (வேலைவாய்ப்புடன்) (Salary- S $ 600)
- Accounting
- Business Administration
- CIMA, ACCA, CAT

மிகக்குறைந்த அடிப்படைத் தகைமை: G.C.E. (O/L)
கல்லூரி, பல்கலைக்கழக அனுமதிகளை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
இடம்: யாழ்.பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபம் (MPCS)
No.127, K.K.S.Road, Jaffna.
காலம்: 01 ஆம் திகதி செப்ரெம்பர் (01.09.2007)
காலை 9.30- 12.30 வரை
குறிப்பு: A/L பரீட்சைக்கு தோற்றிய ஆர்வம் உள்ள மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
*தொலைபேசி மூலம் நேர ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கது.*
GOLDEN EDUCATION SERVICES 0779672883 / 2225503. (64326)


## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திருமதி அன்புமலர் பேரின்பநாயகம்

தோற்றம் 17.03.1946 மறைவு 09.09.2006

திதி: 30.08.2007 *துதியை*

நறுமணம் வீசிய உன் வாசமலரான வாழ்வு
இறைவன் பாதமலராகச் சூட்டப்பட்ட வேளை
நீங்கள் எம்மைப் பிரிந்ததில்லை என்ற
உணர்வோடு வாழுகின்றோம்.

*''அன்னை இல்லம்'',*
*தாவடி, கொக்குவில்.* (63957) கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### Dr.சுவாமிநாதன் மகேந்திரன்

(ENT SURGEON)



ஆதி மயிலிட்டியை பிறப்பிடமாகவும் இல.3, பொன்சேகா பிளேஸ், பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சு.மகேந்திரன் 27.08.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் (B.A. முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சி கலாசாலை, திருநெல்வேலி)- பூதாத்தைப்பிள்ளை தம்பதியரின் மகனும் ஈஸ்வரவள்ளியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரி, இராஜேஸ்வரி காலஞ்சென்ற ஆனந்தகுமாரசாமி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீபாஸ்கரன், சுசீந்திரராஜா, பாலேந்திரா ஆகியோரின் சகோதரரும் கணநாதசங்கர், ஹரேஸ், பிரபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கரன், வித்தியா ஆகியோரின் அன்பு மாமனும் சரணியா, செஷான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2007) பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.

*தகவல்:*
தொ.பே.: 011 2857025 பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன்
(64315) (மைத்துனி) மல்லாகம்.

### ஞானப்பிரகாசம் யோண்பிள்ளை



தும்மலை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் யோண்பிள்ளை 27.08.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - மரியப்பிள்ளை (நல்லபிள்ளை) தம்பதியரின் அன்பு மகனும் கிறேஸ் ஜெயராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவசகாயம், மேரி திரேசா, அந்தோனிப்பிள்ளை, பிரான்சிஸ்சேவியர்,வின்சன்ற் இராசதுரை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பொந்தி ஒழுங்கை,* அ.மேரிதிரேசா
*பண்டத்தரிப்பு.* (64319) *(சகோதரி).*

### திருமதிஅகிலாண்டநாயகி இராஜரட்ணம்



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அகிலாண்டநாயகி இராஜரட்ணம் (25.08.2007) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று (29.08.2007) புதன்கிழமை பி.ப.4 மணிக்கு கொழும்பில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(64305) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல் 222 9914

# சர்வதேசத்தைக் கையாள்வதில் தவறு இழைத்து வரும் கொழும்பு

மோசமான மனித உரிமை மீறல்கள் காரணமாக உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் இலங்கையின் பெயர் கெட்டுப் போயிருக்கும் இந்தச் சூழலில் அடுத்து வரும் மாதங்களில் முக்கியமான நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகிறது. அதேசமயம் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டமும் நியூயோர்க்கில் நடைபெறவிருக்கிறது.

மனித உரிமை மீறல்களுக்காக இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஒன்று ஐ.நா.மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சில தரப்புகள் வற்புறுத்தி வரும் பின்னணியில், அந்த முயற்சி மேற்படி கவுன்ஸிலின் முன்னைய கூட்டத் தொடர்களில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பிற்போடப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது நிலைமை மென்மேலும் மோசமடைந்து வரும் சூழ்நிலையில், இம்முறை கவுன்ஸிலில் மிகத் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

மனித உரிமைகள் அவதானிப்பு மையம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் இயக்கங்களும் இம்முறை ஜெனிவாக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதில் மிக உறுதியாக இருக்கின்றன என்றும், அதற்கான பூர்வாங்க முன்முயற்சிகளில் அவை தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேசமயம், ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் செல்லும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு பல்வேறு உலகத் தலைவர்களையும், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளையும் எதிர்கொள்ளும் சமயத்தில், தமது நாட்டில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவது தொடர்பில் சர்வதேசத்தின் அதிருப்தியையும், ஆட்சேபத்தையும், அழுத்தத்தையும் முகம்கொள்வார் என்றும் எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் செப்ரெம்பரில் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தூதுவர் லூயிஸ் ஆர்பரும், சித்திரவதை தொடர்பான விவகாரங்களில் ஐ.நாவின் தொடர்பாளர் நொவக்கும் இலங்கைக்கு வருகின்றார்கள்.

நிச்சயமாக, இலங்கையின் மோசமான மனித உரிமை நிலைவரம் குறித்து ஊடுருவி ஆராய்ந்து, தங்கள் அவதானிப்புகளை அவர்கள் வெளிப்படுத்துவார்கள் என்பதும் உறுதி.

அப்போது இலங்கை அரசு எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டும் என்பது சிரத்தைக்குரியது.

உண்மையை வெளிப்படுத்தியமைக்காக, மனித உரிமை விவகாரங்கள் மற்றும் அவசர மனிதாபிமான நிவாரணப் பணிகளுக்கான ஐ.நா.பிரதிச்செயலாளர் ஜோன் ஹோம்ஸ், இலங்கை அரசுத் தரப்பினால் 'பயங்கரவாதி' ஆக்கப்பட்டார்.

அதேபோல உண்மைகளைப் பகிரங்கமாக வெளியிட்டமைக்காக, யுத்தப் பிணக்கில் சிக்கியுள்ள சிறுவர்கள் சம்பந்தமான ஐ.நா. தொடர்பாளரின் விசேட பிரதிநிதி அலன் றொக்கும், அவுஸ்திரேலியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான அணியின் தவிசாளருமான கெரித் இவான்ஸும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாகச் சித்திரிக்கப்பட்டனர்.

இனி இலங்கைக்கு - ஒக்ரோபரில் - வரவிருக்கும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் மூத்த அதிகாரிகள் லுயிஸ் ஆர்பர் அம்மையாரும், நெவாக்கும் கூட 'பயங்கரவாதி'களாகவோ அல்லது 'புலி ஆதரவாளர்'களாகவோ அடையாளப்படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் ஜெனிவாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ, அங்கு வைத்து, ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான தூதுவர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரை நேரடியாகச் சந்தித்துப் பேசியிருந்தார். அச்சமயம் இலங்கை ஜனாதிபதி விடுத்த, அழைப்பை ஏற்றே, ஒக்ரோபரில் இலங்கைக்கு வருகிறார் ஆர்பர் அம்மையார்.

அரசுத் தலைவரின் அழைப்பின் பேரில் வந்தாலும், மனித உரிமை விவகாரத்தில் இலங்கை அரசுத் தரப்பின் மெத்தனப் போக்கை - அல்லது அத்துமீறல் அட்டகாசத்தை - ஆர்பர் அம்மையார் பகிரங்கமாக அம்பலப்படுத்த முயல்வாராயின் அவரும் பயங்கரவாதியாகவோ அல்லது புலி ஆதரவாளராகவோ அடையாளப்படுத்தப்படுவதற்கு நேரம் செல்லாது என்பது திண்ணம்.

யுத்த முனைக் களநிலைவர விடயங்களிலாகட்டும் - தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளிலாகட்டும் - அல்லது சர்வதேச இராஜதந்திர தொடர்பாடல் முறைகளிலாகட்டும் - யதார்த்தத்தையும், மெய்மை நிலையையும் புரிந்து கொண்டு, அதற்கேற்பக் காய் நகர்த்தும் தந்திரோபாயம் கொழும்புக்கு வாய்க்கவேயில்லை என்றே கூறவேண்டும். அப்படி சமயோசிதமாகக் கொழும்புத் தலைமை செயற்படாமல் அதைச் சூழ்ந்து தனது இரும்புப் பிடிக்குள் அதைக் கட்டி வைத்திருக்கின்றது பௌத்த - சிங்கள மேலாதிக்கப் பெரும்பான்மை.

எந்த விவகாரத்தையும் இந்த மேலாண்மைப் போக்கின் ஊடாகவே நோக்கும் கொழும்பு, அதன் காரணமாக, தாராளமாகச் சிந்தித்துச் செயலாற்றும் தகுதியை இழந்து தடுமாறுகிறது. இதன் காரணமாக சர்வதேசத்தின் அதிருப்திக்கும், தனிமைப்படுத்தலுக்கும் இலக்காகும் நெருக்கடியையும் அது எதிர்கொண்டிருக்கின்றது என்பதே நிலைமையாகும்.

ஊடகவியலார்களுக்கு எதிரான அச்சுறுத்தல் தீவிரமடைந்து வருவதை அடுத்து இலங்கையில் கருத்துத் தெரிவிப்பதற்கான ஜனநாயக சுதந்திரம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது என சர்வதேசம் கருதத் தலைப்பட்டிருக்கின்றது.

சர்வதேசக் கருத்தியல் நிலைப்பாட்டை உள்வாங்கி, அதற்கேற்ப தந்திரோபாய நகர்வுகளை முன்னெடுக்கும் புத்திசாலித் தனமான இராஜந்திரத்தை அறவே இழந்து நிற்கும் கொழும்பு, அத்தவறுக்காகப் பெரும் விலையைச் செலுத்த வேண்டியிருக்கும். காலம் அதை கொழும்பு அரசுக்கு உறைப்பாக உணர்த்தும் என எதிர்பார்க்கலாம்.

# மேலும் ஐந்து தொழிற்சங்கங்கள் ஆசிரியர் போராட்டத்தில் இணைந்தன

## விடைத்தாள் திருத்தும் பணி பாதிப்பு

கொழும்பு, ஓக. 30

சம்பள முரண்பாடுகளைச் சீர்செய்யக்கோரி ஆசிரியர்களின் ஐந்து தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுவரும் - ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை விடைத்தாளைத் திருத்தும் பணிப் பகிஷ்கரிப்புக்கு - மேலும் ஐந்து ஆசிரியர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகத் தலையிட்டு அப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்றுஅச்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இச் சங்கங்கள் நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தின. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் உபுல் காரியவஸம் இவ்விடயம் குறித்து அங்கு கூறியவை வருமாறு:-

ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் பணியை அவர்கள் பகிஷ்கரித்துள்ளனர். அவர்களின் போராட்டம் நியாயமானது. கடந்த கால வரவு - செலவுத் திட்டங்களில் ஆசிரியர்களின் சம்பளம் உரிய முறையில் அதிகரிக்கப்படவில்லை. உரியமுறையில் அதிகரிக்கப்பட்டிருந்தால் இந்தப் போராட்டத்தை அவர்கள் மேற்கொள்ளவேண்டிய அவசியம் எழுந்திருக்காது.

2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில்கூட ஆசிரியர்களின் சம்பளம் 20 வீதமும், அதிபர்களில் சம்பளம் 18 வீதமும் அதிகரிக்கப்பட்டது. ஏனைய அரச ஊழியர்களுக்கு 40 வீதம் வரை அதிகரிப்பு வழங்கப்பட்டது.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான யோசனை ஒன்றை நாம் தயாரித்து கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பித்திருந்தோம்.

அந்த யோசனையை அடிப்படையாக வைத்து கல்வி அமைச்சு பொது யோசனையைத் தயாரித்து சம்பள ஆணைக்குழுவிடம் மே மாதம் 24 ஆம் திகதி கொடுத்தது.

சம்பள ஆணைக்குழு ஓகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி பதில் தருவதாகச் சொன்னது. ஆனால், கல்வி அமைச்சின் யோசனையை ஏற்கமுடியாது என்று சம்பள ஆணைக்குழு இப்போது அறிவித்துவிட்டது.

இந்த விடயத்தில் கல்வி அமைச்சின் தரப்பில் எந்த விதத் தவறும் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். கல்வி அமைச்சர் எம்முடன் இணைந்து மூன்று தடவைகள் இந்த விடயத்தில் ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுத்தார். தேவையான யோசனைகள் அனைத்தையும் அவர் சம்பள ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தார்.

தற்போது சம்பள ஆணைக்குழுதான் சம்பளப்பிரச்சினையைத் தீர்க்காமல் பிரச்சினையை பெரிதுபடுத்திக் கொண்டு போகிறது. ஆகவே, இறுதியாக ஜனாதிபதிதான் இந்த விடயத்தில் தலையிடவேண்டும். இல்லையேல் மாணவர்களின் கல்விதான் பாதிக்கப்படும் - என்றார். (சி)

## அத்தாஸ் அச்சுறுத்தப்படுவதை ஆட்சேபித்து

# ஊடகவியலாளர்கள் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக.30

சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் முதலான செயற்பாடுகளை கண்டித்து இன்று நண்பகல் 12.30 மணிமுதல் 1.30 மணி வரை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெறவுள்ளது.

இலங்கையின் பிரதான ஐந்து ஊடக அமைப்புகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

அரசின் மிக் விமானக் கொள்வனவின் பின்னாலிருப்பதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளை அம்பலத்துக்கு கொண்டு வந்ததையடுத்து ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸுக்கு தொடர்ந்து விடுக்கப்படும் அச்சுறுத்தல்களை ஊடக அமைப்புகள் வன்மையாகக் கண்டிக்கின்றன.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை முஸ்லிம் ஊடக அவை, இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம் ஆகியனவே இந்தப் போராட்டத்தை ஒன்றிணைந்து முன்னெடுக்கின்றன.

இது தொடர்பாக அந்த அமைப்புகள் ஒன்றிணைந்து விடுத்துள்ள அறிக்கையில் சுதந்திர ஊடகத்தை மதிப்பவர்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சி)

## நல்லூர் வாசிகளுக்கு விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஓக.30

நல்லூர் பிரதேச மக்களுக்கான விசேட அடையாளஅட்டை விண்ணப்பப் படிவங்களை நாளைமறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 4ஆம் திகதிவரை கோயில் வீதியில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஜே/106, 107, 108, 109 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமது கிராம சேவையாளரிடம் சிபார்சினைப் பெற்றுப் படிவத்தைக் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1-111)

# நல்லையில் இசையர்ச்சனை இம்முறை காலையில் இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஓக.30

நல்லைக் கந்தன் ஆலய கார்த்திகைத் திருவிழா அன்று இரவு இடம்பெறும் இசையர்ச்சனை நிகழ்வு இம்முறை காலையில் இடம்பெறவுள்ளது.

கார்த்திகைத் திருவிழாவான எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7மணி முதல் 9 மணிவரை ஆலய உள் வீதியில் இந்த இசையர்ச்சனை நிகழ்வு இடம்பெறும்.

இசையர்ச்சனை நிகழ்வில் கலந்து கொள்ளும் கலைஞர்களுக்கான ஒத்திகை நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் இடம்பெறும்.

சகல கலைஞர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## யாழ்.பிரதேச செயலர் பிரிவில் நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஓக.30

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தின் ஏற்பாட்டில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நாளை யாழ்.பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் 3 மணிவரை இந்நடமாடும் சேவை நடைபெறும்.

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இந்த நடமாடும் சேவையில் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# அன்பளிப்பாகக் கிடைத்த பேரீச்சை விற்பனையில்!

## அரசியல் வாதிகளின் கைவரிசை இது

கொழும்பு, ஓக.30

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என சவூதி அரேபிய அரசினால் வழங்கப்பட்ட பல மெற்றித்தொன் பேரீச்சம்பழம் இப்பொழுது கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளதாம்.

-ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பெருந்தொகையான பேரீச்சம்பழத்தை சவூதி அரசு வழங்கியுள்ளது.

இவை அனைத்தும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியிடமே ஒப்படைக்கப்பட்டன.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற பேரீச்சம்பழம் உரிய முறையில் பங்கீடு செய்யப்படாததனால் அவை பொதுச் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவை வழங்கப் படவில்லை எனப் பல குற்றச்சாட்டுகள் அரசுக்கு கிடைத்திருக்கின்றன.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பேரீச்சம்பழங்கள், நோன்புப் பெருநாளின்போது பள்ளிவாசல்களின் ஊடாகப் பங்கிடப்பட வேண்டும் என கிழக்கு மாகாண அரசியல் வாதிகள் சிலர் வற்புறுத்திக் கேட்டு அவற்றைப் பொறுப்பேற்றனராம்.

நோன்புப் பெருநாளுக்கு இன்னும் எவ்வளவோ காலம் இருக்கின்றது. ஆனால் இந்த அரசியல்வாதிகள் நோன்புப் பெருநாளைக் காரணம் காட்டி பேரீச்சம் பழங்களைப் பொறுப்பேற்று, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றில் அடித்துள்ளனர்.

அதேசமயம் நோன்பு நோற்கும் தமது மக்களுக்கும் அவற்றை அவர்கள் வழங்கவில்லை. மாறாகத் தெரிந்தவர்கள் மூலம் சந்தையில் விற்பனைக்கு விட்டு, அந்த அன்பளிப்புகளைப் பணமாக்கிச் சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள் சம்பந்தப்பட்டோர் எனக் குற்றச்சாட்டுக்கள் கிளப்பப்பட்டுள்ளன. (சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 14 | வெள்ளிக்கிழமை 31.08.2007 |
| திதி : திருதியை | மு.ப. 11.02 |
| நட்சத்திரம் : | ரேவதி |
| பி.இ : 05.24 | |
| சுபநேரம் | : 06.05 - 07.35 |
| ராகுகாலம் | : 10.35 - 12.05 |

## தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி இன்று கலந்துரையாடல்

தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற விருக்கும் வலிகாமம் பாடசாலைகளின் அதிபர்கள் அல்லது விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களை இன்று காலை10மணிக்கு வலய அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற உள்ளவர்களின் விவரங்கள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (அ-1-68)

## திருமலையில் இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை - அன்புவழிபுரத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் 'தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்' அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவர் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முரளி என்று அழைக்கப்படும் நடராஜா குமணன் (வயது - 24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போராட்டம் கிரிக்கெட் போட்டியல்ல; எடுத்த எடுப்பில் 'சிக்ஸர்' அடிக்க முடியாது

## புலிகளின் மூத்த உறுப்பினர் யோகி சொல்கிறார்

கிளிநொச்சி, ஒக.30

விடுதலைப் போராட்டம் கிரிக்கெட் போட்டியல்ல. எடுத்த எடுப்பில் 'சிக்ஸர்' அடிக்க முடியாது என்று விடுதலைப்பு லிகளின் மூத்த உறுப்பினர் யோகரட்ணம் யோகி கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் நேற்றுமுன்தினம் ஒலிபரப்பாகிய 'செய்தி அலைகள்' நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியிலேயே விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் 'சமர்' நூலகப் பொறுப்பாளருமான யோகி இப்படித் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் தெரிவித்த சில அம்சங்கள் வருமாறு -

சமாதானம் என்ற நாடகத்தினால்தான் தமிழர்கள் மீது படுகொலைகள் நடைபெறுகின்றன. தமிழர்கள் தாங்கொணா துயருக்குள்ளாகின்றனர். புலிகள் அமைதி காக்கின்றனர் என்று புலம்பெயர் தமிழர்கள் நினைக்கின்றனர். ஆனால், அப்படியொன்றும் இல்லை. புலிகள் அமைதி காக்கவில்லை. அப்படி அமைதி காத்திருந்தால் யாழில் 40 ஆயிரம் சிங்கள இராணுவத்தினர் அச்சத்திலே வாழவேண்டியிருக்காது. எரிமலையின் விளிம்பில் கொழும்பு உள்ளிட்ட சிங்கள தேசம் நடக்க வேண்டிய தேவையுமிருக்காது. ஆக 'ஏதோ' நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதுதான் இதன் அர்த்தம்.

இது ஒன்றும் கிரிக்கெட் மட்ச் அல்ல. எடுத்தவுடன் சிக்சர் அடிக்க. இது ஒரு விடுதலை அமைப்பு. காலம், சூழல் அதற்கேற்றவாறான நகர்வுகள் உண்டு. கொலைகளும், தாங்கொணாத் துயரும் இந்த விடுதலைப் போரோடு தொடர்புபட்டது. அந்தக் கொலைகளைத் தடுக்கவும், துயரை நீக்கவுமே இந்த விடுதலைப் போராட்டம் இந்த மண்ணில் குருதியும் நாளாந்த சாவும் என்பது எமது போராட்டத்தினோடு இணைந்த ஒரு அங்கம். இதற்கூடாகத்தான் இந்தப் போராட்டம் நகர்கின்றது.

தமிழ் மக்களைக் கொல்ல வேண்டும்- அழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்ற ஓர் அரசுக்கு எதிராக போராடுகின்றோம் என்றால், எமக்குத் துன்பங்கள் வரத்தான் செய்யும். ஆகவே, புலம்பெயர் தமிழ் மக்கள் நினைப்பது போல சமாதானம் என்ற நாடகத்துக்குள் மட்டும் நாம் நடிக்கவில்லை. அப்படியானால் இப்போதும் போராளிகள் வீரச்சாவடையத் தேவையில்லை - என்றார்.

## ஆள் கடத்தல் அரசு...

(முதலாம் பக்கத் தொடர்சி)

குற்றமிழைப்போரை நீதிமன்றங்களில் நிறுத்துவதற்கோ நடவடிக்கை எடுப்பதில்லை; அக்கறை காட்டுவதில்லை.

அதாவது அரசுகள் இந்த மனித உரிமை மீறல்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்றன.

அதுமட்டுமன்றி, காணாமற்போதல்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட குடும்பங்களோ சிவில் குழுக்களோ நீதிகேட்டு நீதி மன்றுகளுக்குச் செல்வதை அரசாங்கங்கள் தடுத்து வருகின்றன. அவர்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டே அவை வெளி வராமல் மறைக்கப்படுகின்றன.

மேலும் சம்பந்தப்பட்ட நாடுகளில் ஆள் கடத்தல்கள் காணாமற்போதல்கள் குறித்த முறைப்பாடுகள் தக்கவாறு, உரிய நியமப்படி விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அதனால் ஆள் கடத்தல்களில் ஈடுபடுவோர் தாம் விசாரணைக்கு ஆளாக்கப்படமாட்டார்கள் என்பதனை அறிந்து வைத்துள்ளனர்.

ஆள் கடத்தல், காணாமற்போவோர் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் வழமையான நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதில்லை. அதற்குப் பதிலாக, நீதிமன்றங்களுக்கு வெளியே ஆணைக்குழுக்களை அரசாங்கங்கள் நியமிக்கின்றன. அரசு நடவடிக்கை எடுக்கிறது என்று வெளித்தோற்றத்திற்குக் காட்டுவதற்கே இந்தத் தந்திரத்தை அவை கையாள்கின்றன.

மேற்சொன்ன நாடுகளில் மிக பலவற்றிலும் நீதி வழங்கும் துறையினரும் மக்கள் வல்வந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுவதை மிகக்கொடிய குற்றம் என்று கருதும் உணர்வுமயப்படுத்தப்பட்ட நிலையில் இல்லை.

ஆசிய நாடுகளில் வல்வந்தமாக நாடைபெறும் ஆள் கடத்தல்களையும், காணாமற்போகச் செய்தலையும் நிறுத்துவதற்கான போதிய சர்வதேச அழுத்தம் கொடுக்கப்படவில்லை. அதனால் ஐ.நா.நிறுவன அமைப்புகளுக்கு இவற்றில் தலையிட வேண்டிய தார்மீகக் கடமை உண்டு - என்றுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு 1984 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு ஆசிய வட்டத்தில் உள்ள நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்காணித்து, அவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் - குறைப்பதற்கும் பாடுபடும் அரச சார்பற்ற நிறுவனமாகும். (அ)

## மேலும் ரூ. 3, 400....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது என்றும் அக்கட்சி கூறியுள்ளது.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

## கருணா குழுவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப் போவதாக அரசு அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமை மீறல்களில் இராணுவமும் அதனுடன் சேர்ந்தியங்கும் குழுக் களும் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவற்றைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மஹிந்த அரசு மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்து வரும் தருணத்திலும், விசாரணைக்குழு தொடர்பான அறிவித்தலை அது வெளியிட்டிருப்பதாக சர்வதேச செய்தி ஏஜென்சிகள் குறிப்பிட்டுக்காட்டியுள்ளன.

மனித உரிமைகளுக்கான ஐ.நா.தூதர் அலன் றொக், கடந்த வருடம் இங்கு வந்திருந்த போது -

கருணா குழுவினர் சிறுவர்களைக் கடத்திப் படையில் சேர்ப்பதற்கு இராணுவம் உதவுவது குறித்துப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகக் கூறியிருந்தார்.

அரசு அப்போது அதனை ஆவேசத் தோடு மறுத் திருந்தது.

ஆனால், -

இப்போது - 'இவை யாவும் குற்றச் சாட்டுக்களாகவே உள்ளன. அது குறித்து நாம் விசாரித்து அறியவிரும்புகின்றோம்.' என்று மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, நேற்று 'ரொய்ட்டருக்குத் தெரிவித்திருக்கிறார். (அ)

## அனைத்துக் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதாரணதலைமையிலான அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இறுதி ஆவணத்தைத் தயாரித்தநிலையில் அந்த ஆவணத்தை ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியன எதிர்த்ததன் விளைவாக அக்குழு செயலிழந்தது. அமர்வுகள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலைக்கு தீர்வு காணும் முயற் சியாக பிரதமர்தலைமையில் சகல கட்சிகளின் தலைவர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இக் குழு நேற்றுமாலை பிரதமர் அலுவலகத்தில் கூடியது.ஜாதிக ஹெலஉறுமய, ஸ்ரீ.சு.கட்சி ,மக்கள் ஐக்கியமுன்னணி உட்பட பலகட்சிகள் கலந்துகொண்டன.

அனைத்துக் கட்சிக் குழுவைத் தொடர்ந்து கூட்டி அதன்ஊடாக தீர்வுக்கான ஆவணத்தைத் தயாரிப்பது என கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டது.

தீர்வுயோசனைகள் ஒற்றையாட்சி முறையின்கீழா அல்லது ஐக்கிய இலங்கை என்ற முறையின் கீழா என்பது தொடர்பாக கட்சிகளிடையே முரண்பாடு எழுந் திருந்தது. எனினும் நேற்றைய கூட்டத்தில் அதுதொடர்பாக ஆராயப்படவில்லை என கூட்டத் தில் கலந்துகொண்ட பிரதிநிதிஒருவர் தெரிவித்தார். (1)

## தரம் 1 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிராந்தியத்தில் கடமையாற்றும் படையினராக அல்லது பொலிஸாக இருந்தால் - 10 புள்ளிகள்.

✱ பெற்றோர் பாடசாலை சுற்றாடலில் வசிக்கும் குடியிருப்பாளராகவும் அரச அல்லது தனியார் துறை அதிகாரியாகவும் இருப்பின் - 05 புள்ளிகள்.

- இவையே புள்ளி அடிப்படையாகும்.

இதேசமயம்,கொழும்பு விசாகா வித்தியாலயம் போன்றவை பாடசாலை அனுமதிக்கும், தற்போது கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்தும் தலா நான்காயிரம் ரூபா வரை அறவிடுகின்றது என்றும் -

இது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது என்றும் -

கல்வி அமைச்சின் செயலாளர் ஆரிய ரத்ன ஹேவகே நேற்று உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனைப் பரிசீலித்த நீதிமன்றம், மாணவர் அனுமதி தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்குப் பாடசாலைகள் தோறும் மேற்படி சுற்றுநிருபத்துக்கு அமைய நியமிக்கப்படும் உயர் மட்டக் குழுவின் இணக்கமும்கவனிப்புமின்றி இத்தகைய அறவீடுகள் செய்யப்படக் கூடாது என உத்தரவிட்டார். (சி)

## யாழ்.நூலகத்துக்கு 'மைக்றோ றீடர்' இன்றுகையளிப்பு

யாழ்.பொதுசன நூலகத்துக்கு மைக்றோ றீடர் (Micro Reader) இயந்திரம் ஒன்றை ஜேர்மன்தொழில்நுட்ப நிறுவனம் வழங்கவுள்ளது. குறிப்பிட்ட இயந்திரத்தைக் கையளிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.நூலகத்தில் இடம் பெறும்.

ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனத் தின் யாழ்.வதிவிடப் பிரதிநிதி இயந்திரத்தை யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிப்பார். (அ-1)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

புதிதாகத் திறக்கப்படவிருக்கும் பத்து அலுவலகங்களுக்குப் புறம்பாகக் கருணா அணியினர் ஏற்கனவே இது வரையில் கிழக்கு மாகாணத்தில் ஏழு அரசியல் அலுவலகங்களைத் திறந்து செயற்பட்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களை ஆயத்தம் செய்யுமாறு கருணா தனது பிரதேசத் தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார் - என்றும் கூறப்பட்டது. (சி)

## அல்வாயிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் முகாம் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். சேத விவரம் தெரியவில்லை.

வடமராட்சியில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள தகவலில் -

நேற்றுக் காலை 6 மணியளவில் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். பதில் தாக்குதலைப் படையினர் மேற்கொண்டனர்.

இதில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். அவர் வசம் இருந்த கிரனேட் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-155-115)

## யாழ்.மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டத்தில் பங்கு பற்றினர்.

இந்தப் போராட்டம் குறித்து கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா -

உள்ளகப் பயிற்சி பெறும் டாக்டர்களின் பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம் - எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த முடிவை தானாக எடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச மருத்துவர் சங்கம் ஆகியவை முன் வைத்த யோசனைகளின் அடிப்படையிலேயே அரசு இந்த முடிவை எடுத்தது. இந்த முடிவை விலக்கிக்கொள்ளுமாறு கோரினால் அதனைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றது - என்று கூறினார். (அ-1)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
நடன ஆசிரியை
செல்வி தர்சினி ஜெயராசசேகரம்
அவர்களின் திடீர் மறைவால் துயருறும்
அவரின் குடும்பத்தினருக்கும்,
உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மன்/புனித வளனார்
R.C.T.V
தாழ்வு பாடு,
மன்னார்.

அதிபர், பிரதிஅதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்,

(64303)

வின்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புவியியல்
திரு. N. பாபு
A/L 2008
Paper Class Sat., Sun. 12.00
பிரதான அலகுகள்
உலகப் படம் குறித்தல்
சூழற் புவியியல் பகுதி I
மானிடப் புவியியல் பகுதி I
கடந்த கால வினாக்கள் மீட்டல்
வெளி மாணவர்களுக்குப் புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
மாதம் 2 தடவை பரீட்சை
ஆரம்பம் 01.09.2007
(சனி 12.00)

நிருநட்டன்அக்கடமி
கோண்டாவில்
புதிய பிரிவு
3மாதகாலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
பிரபல ஆசிரியர்:
by லீலாக்கிருஷ்ணன்
ஆரம்பம்: 01.09.2007 Sat. 1.00 p.m.

நிருநட்டன்அக்கடமி
கோண்டாவில்
புதிய பிரிவு
3மாத காலத்தில்
Spoken English with Grammar
பிரபல ஆசிரியர்:
by ஞானாகரன்
ஆரம்பம்: 31.08.2007 Fri. 3.30 p.m.
அனுமதிக்கு முந்துங்கள்

ENGLISH SPOKEN With GRAMMAR
by BRITTO
புதிய பிரிவு ஆரம்பம் :-01.09.2007
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
நேரம் :- காலை 7.30
இடம் :- கோக்குவில்
(ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
(அ/53476)

# மலிவு விற்பனை! SALE








| | விற்ற விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| ★ நோக்கியா- 1110i (Made in HUNGARY) | ~~5750~~/- | 5300/- |
| ★ நோக்கியா - 2310 | ~~8700~~/- | 7900/- |
| ★ நோக்கியா - 1600 | ~~7200~~/- | 6800/- |
| ★ போன் பற்றிகள் | ~~600~~/- | 450/- |
| ★ போன் சார்சர் | ~~350~~/- | 200/- |
| ★ போன் கவுசிங் | ~~450~~/- | 300/- |
| ★ போன் கவல் (சிலிக்கோன், கிளாஸ்) | ~~150~~/- | 60/- |
| ★ கோட் நூல் (பெரியது) | ~~100~~/- | 60/- |
| (சிறிது) | ~~50~~/- | 30/- |
| ★ அன்ரனா கிளிப் | ~~350~~/- | 280/- |
| ★ G.S.M. மேசைத் தொலைபேசி | ~~9000~~/- | 8000/- |
| ★ கெற்போன் | ~~450~~/- | 290/- |

★ மற்றும் கையடக்கத் தொலைபேசி உதிரிப் பாகங்களை பெற்றிடவும்
★ டயலொக் பில் (Bill) கொடுப்பனவுகளை செலுத்திடவும் நாடவேண்டிய இடம்

நியூ பவர் செலூலர் ரிரேடிங் கம்பனி
205/01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகில்).
தொ.பே. 0776660289, 0774014725


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org